நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை - 2019

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (''அதிகாரசபை'') இன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் கம்பனியின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

உரிய நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ) கடன்டிகாடுத்தோர் பட்டியலிலுள்ள ரூபா 1,303,499 வரவு மீதிகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 1 (எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ்) இல் உள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இவற்றில் அத்திகதியிலுள்ளவாறு ரூபா 71,375	எதிர்காலத்தில் இந்த வகையான சிக்கல்களைச் சரிசெய்ய மாதாந்தம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, அதற்கேற்ப பட்டோலைகளில் சீராக்கங்களை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	செலவு மீதிகளுக்கு எதிராக எதிரீடு செய்யாமல் வரவு மீதிகள் தனியாக காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் அசாதாரண வரவு மற்றும் செலவு மீதிகளை அதில் உள்ளடக்கக்கூடாது.

	மற்றும் ரூபா 30,087 தொகையான முறையே அசாதாரண வரவு மற்றும் செலவு மீதிகளைக் கொண்ட சில்லறைக் காசு முற்பணமும் முறையே ரூ 387,218 மற்றும் ரூபா 261,026 தொகையான விசேட முற்பணமும் உள்ளடங்கியிருந்தன.		
(ஆ)	முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சுமார் ரூபா 4,251,260 கிரயமான சொத்துக்கள் அந்த சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கைக் காலம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் - 3 இல் உள்ள ஏற்பாடுகளின் படி கணக்கீடு செய்யப்படாமல் அதிகாரசபையால் தொடர்ந்தும் பயன்படு த்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்த நோக்கத்திற்காக முறையான மீள் மதிப்பீட்டுக் கொள்கையொன்று நிறுவப் பட்டிருக்கவில்லை.	2019 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்புச் சபை அறி க்கைகள் கிடைத்தவுடன் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக் களின் பொருளாதார வாழ்க்கை காலம் மறு மதிப்பீடு செய்யப்படும். மேலும், சொத்து பதிவே ட்டை பராமரிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு எதிர்கால த்தில் அந்த வகையான சொத்துக்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்து மாறு அறிவுறுத்தப்பட்டு ள்ளது.	அதிகாரசபையால் தொடர்ச்சியாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமா னத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயனு ள்ள பொருளாதார வாழ்க்கை காலத்தை மறு மதிப்பீடு செய்து நியமத்திலுள்ள ஏற்பா டுகளுக்கு ஏற்ப அவற் றைக் கணக்கீடு செய் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2006 ஜனவரி 01 முதல் 2011 டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 22,466,288 மற்றும் ரூபா 2,695,954 தொகையான முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கான நிலுவையான உதவு தொகைகளை செலுத்ததாமை தொடர் பில் தொழில் திணைக்களம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபை ஆகியவற்றுக்கு இரண்டு முறை ப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனையடுத்து, அதிகாரசபை நிலுவை யான ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அதன் மீதான மிகைவிதிப்பு தொடர்பில் ரூபா 2,695,954 தொகை யினை செலுத்துதல் வேண்டுமென்றும் அதனை 14 நாட்களுக்குள் அனுப்பி வைத்தல் வேண்டும் என்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபையால் 2019 டிசம்பர் 07 அன்று இறுதி நினைவூட்டல் கடிதம் வழங்கப்பட்டிருந் தது. எவ்வாறாயினும், எஸ்.எல்.பி.எஸ். ஏ.எஸ் - 8 இன் தேவைப்பாட்டிற்கு அமைய 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 25,162,242 நிகழத்தக்க பொறுப்புக்கான ஏற்பாட்டை மேற்கொள்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.	தற்போது நடைபெற்று வரும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு அதிகாரிகளு க்கு அறிவுறுத்தப்பட்டுள் ளதுடன், அதன்படி நிதிக் கூற்றுக்களில் திருத்தங்கள் செய்யப்படும்.	நிதிக் கூற்றுக்களின் நியாயமான சமர்ப்பித் தலை உறுதி செய்வ தற்காக நிதிக்கூற்றுக்க ளிலுள்ள அனைத்து நிகழத்தக்க பொறுப்புக ளுக்கும் ஒரு ஏற்பா ட்டை செய்வதற்கு முகாமைத்துவம் கவ னம் செலுத்த வேண் டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ)	கேட்போர்கூடம் மற்றும் கருத்தரங்கு அறைகளை வாடகைக்கு விடுவதிலிருந்து முன்னைய ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டுகளிற்காக கிடைத்திருந்த முறையே ரூபா 387,500 மற்றும் ரூபா 142,000 தொகையான வருமானம் கால ரீதியாக சீராக்கப்படாது மீளாய்வாண்டின் வருமான மாக கருதப்பட்டிருந்தது. அதன்காரணமாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 529,500 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.	இனங்காணப்பட்டுள்ள ரூபா 529,500 பற்றாக் குறை நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படும். மேலும், வருமானத்தை அங்கீகரிக் கையில் அட்டுறு அடிப்ப டையுடன் இணங்கி ஒழுகுமாறு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.	குறித்த கணக்காண் டுக்கு உரித்தான வரு மானம் மற்றும் செலவி னத்தை சரியான இனங்கண்டு அங்கீகரி த்தல் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்ப டுதல் வேண்டும்.
(ஆ)	குத்தகை வாடகையினைச் செலுத்துவதற் காக 2019 ஆம் ஆண்டில் எவ்வித நிதியும் பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்திருக் காத போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றின் நிதிச் செயற்பாடுகளின் கீழ் மீளாய்வா ண்டில் கிடைத்த குத்தகை வாடகையாக ரூபா 5,068,537 காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பில் தெளிவுபடுத்தல் கள் கோரப்பட்டிருந்த போதிலும், இதற்கான காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப் பட்டிருக்கவில்லை.	எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் - 02 இல் உள்ள ஏற்பாடுகளை பின்பற்றுமாறு காசுப் பாய்ச் சல் கூற்றுத் தயாரிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் கடுமையாக அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.	குறித்த கணக்காண் டுக்கு உரித்தான பெறு வனவு மற்றும் கொடுப் பனவுகளை சரியாக இனங்கண்டு அங்கீகரி த்தல் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்ப டுதல் வேண்டும்.
(இ)	முன்னைய ஆண்டில் ஒப்பந்ததாரர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 670,643 தொகையான பெறுமதி சேர் வரி (வற்), வற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஒப்பந்ததார ரிற்கான முற்பணக் கணக்கிற்கு தவறுதலாக வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்த தாரருக்கான முற்பணக் கணக்கிலுள்ள ரூபா 1,245,629 தொகை ரூபா 670,643 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருக்க பெறவேண்டிய வெற் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி அத்தொகை யால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	இதன் தாக்கமான ரூபா 670,643 நிதிக்கூற்றுக்களில் அதற்கேற்ப சீராக்கப்படும். மேலும், பேரேட்டில் பராம ரிக்கப்படும் கட்டுப்பாட்டு கணக்குகள் தொடர்பாக நிறுவப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படு த்த தேவையான நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.	எதிர்காலத்தில் இவ் வகைத் தவறுகளை குறைப்பதற்காக கணக் கீட்டு உள்ளகக் கட்டுப் பாடுகளை பலப்படுத்த வேண்டும்.
(ஈ)	கணக்காய்விற்கு வழங்கப்பட்ட விரிவான பட்டோலைகளின்படி, 2018 மற்றும் 2019 டிசம்பர் 31 களில் உள்ளவாறான செலுத்த வேண்டிய வற் முறையே ரூபா 963,217 மற்றும் ரூபா 629,147 ஆகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுக்கான மறுசீரமைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிலும் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களிலும் முறையே செலுத்த வேண்டிய வற் என ரூபா 274,282 தொகையும் பெறத்தக்க வற் என ரூபா 145,432 தொகையும் காட்டப்ப ட்டிருந்தன. எனவே, நிதிக்கூற்றுக்களில்	மாதாந்த வற் கணக்கீட்டு செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள குறித்த உறுப்பினர்களுக்கு பணிகள் மற்றும் பொறுப் புகள் ஒதுக்கப்பட்டுள்ள துடன் வற் கணக்கிலுள்ள பதிவுகள் குறித்து அதிக கவனம் செலுத்துகின்றது.	அறிக்கையிடல் திகதி யில் உள்ளவாறான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை சரியாக இனங்கண்டு அங்கீகரிப்பது தொடர் பில் கூடிய கவனம் செலுத்தப்படுதல் வேண் டும்.

	காட்டப்பட்டுள்ள பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய வெற் இன் சரியான தன்மையை கணக்காய்வில் மதிப்பாய்வு செய்ய முடியவில்லை.			
(உ)	நிர்மாண உபகரணங்கள் பயிற்சி நிலையம் (சிட்ரக்) தாபிக்கப்பட்டுள்ள காணி தொடர்பில் அதிகாரசபைக்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் (யுடிஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக் கப்படவில்லை. இதற்கிடையில், 2019 ஜூன் 21 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் இந்த சொத்தின் உரித்துறுதியை வழங்கு வதற்கு ரூபா 54,890,701 மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்குமாறு யுடிஏ அதிகாரசபையை கேட்டுக் கொண்டிருந்த போதிலும் 2019 டிசம்பர் 31 வரை இந்த நிலத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்க வில்லை.	கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.	சொத்தின் உரிமையை திருப்திகரமாக மெய் மையாய்வு செய்வதற் காக ஆவண சான்று கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டு மென்பதுடன் உரிமை யானது அதிகாரசபை க்கு சொந்தமானது என்றால், இந்த சொத் தை மதிப்பிட்டு அதிகா ரசபையின் கணக்குக ளுக்கு கொண்டு வருவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

	கணக்காய்வு விடயம்	தொகை	சமர்ப்பிக்கப்படாத சான்று	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
		ரூபா			
(அ)	நிர்மாண தனிச்சிறப்பு வருமானம்	3,214,043	அனுசரணைகளை பெற்றுக்கொள்வதற் காக வெளித் தரப்பி னர்களிடம் மேற்கொ ள்ளப்பட்ட வேண்டு கோள்கள் அவ்வேண் டுகோள்கள் மீது பெறப்பட்ட உள்ளப டியான தொகை, அதனுடன் தொடர்பு டைய ஆதாரப்படுத் தல் ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய கோவைகள் உள்ளி ட்ட ஏற்பட்ட அனைத் துச் செலவின விபரங் கள்.	கருத்துத் தெரிவிக்கப்படவி ல்லை.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொடு க்கல் வாங்கல்கள் மற்றும் தொகை களை திருப்திகர மாக சான்றுறுதிப் படுத்துவதற்கும் மெய்மையாய்வு செய்வதற்கும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்கா ய்விற்கு கோரப்ப ட்ட அனைத்து ஆவணச் சான்று களும் சமர்ப்பிக் கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ) ரூபா 19,510,624 கூட்டுத் தொகையான கடன்பட்டோர் மீதிகளிலிருந்து எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட ரூபா 10,467,054 தொகைக்குரிய 37 கடன்பட்டோரிமிருந்து மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்தன. இருப்பினும், 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு கடன்பட்டோரும் தனக்குரிய மீதியை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதிகளின் அறவிடக்கூடிய தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமானதாக உள்ளது.	2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்பட்டோர் மீதிகளை பதிவழிப்புச் செய்யும் ஒரு பகுதியாகவே மீதி உறுதிப்படுத்தல் நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. அந்தக் கடன்பட்டோரின் அறவீட்டை உறுதிசெய்த பின்னர், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பதிவழிக்கப்பட வேண்டிய கடன்பட்டோர்களை உள்ளடக்கிய பட்டியல் தாரிக்கப்பட்டு அவர்களின் கூடுதல் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.	நிலுவையில் உள்ள மீதிகளை எவ்வித தாமதமும் இல்லாமல் அறவிட வேண்டுமென்பதுடன் நிலுவையில் உள்ள மீதிகளின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்த சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வயதுப் பகுப்பாய்வின் படி, 2020 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 8,371,180 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது காணப்பட்டது. அதில் ரூபா 7,598,264 தொகை ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.	2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்பட்டோர் மீதிகளை பதிவழிப்புச் செய்யும் ஒரு பகுதியாகவே மீதி உறுதிப்படுத்தல் நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. அந்தக் கடன்பட்டோரின் அறவீட்டை உறுதிசெய்த பின்னர், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பதிவழிக்கப்பட வேண்டிய கடன்பட்டோர்களை உள்ளடக்கிய பட்டியல் தாரிக்கப்பட்டு அவர்களின் கூடுதல் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.	நீண்டகாலமாக நிலுவையிலுள்ள மீதிகளை எவ்வித தாமதமும் இல்லாமல் அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் தேவையான அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் இவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டியவைகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ) ரூபா 31,142,345 கூட்டுத் தொகையான கடன்கொடுத்தோருக்குரிய வயதுப் பகுப்பாய்வும் உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், ரூபா 5,251,265 கூட்டுமொத்தமான வியாபாரக் கடன்கொடுத்தோர் மற்றும் சில்லறைக் கடன்கொடுத்தோர் என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளிற்கும் மேல் நிலுவையாக காணப்	2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்கொடுத்தோர் மீதிகளை அகற்றும் ஒரு பகுதியாகவே மீதி உறுதிப்படுத்தல் நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. தொடர்புடைய தகவல்கள் பெறப்பட்ட பின்னர், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்கொடுத்தோரை உள்ளடக்கிய பட்டியல் தாரிக்கப்பட்டு கணக்காய்வு	அவ்வாறான பொறுப்புக்களிற்கு நிலவுகின்ற கடப்பாடுகளை முறையாக இனங்கண்ட பின்னர், நீண்டகாலமாக நிலுவையிலுள்ள செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடி

	பட்டதுடன் இந்த மீதிகள் 2020 யூன் 30 ஆந் திகதியிலுள்ளவாறும் தீர்க்கப்படாது எவ்வித மாற்றமு மின்றிக் காணப்பட்டது.	மற்றும் முகாமைத்துவக் குழு வின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வருமானத்திற்கு எடுக்கப்படும்.	க்கைகள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய நடைமு றைப் பொறுப்புக்களின் கீழ் ரூபா 3,797,384 மற்றும் ரூபா 1,052,500 தொகைகள் முறையே செலுத்த வேண்டிய பிடிகாசு மற்றும் மீளளிக்கப்பட வேண்டிய கேள்விப் பண வைப்புக்கள் என காண்பிக்க ப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளிலுள்ள ரூபா 2,274,458 மற்றும் ரூபா 811,500 தொகைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக தீர்க்கப்பட்டோ அல்லது மீளளிக்கப்ப ட்டோ இருக்கவில்லை.	உடன்படிக்கைகளின் பிரகாரம் சேவை வழங்குநர்களால் சேவை கள் பூரணமாக வழங்கப்பட்டிருக் கவில்லை. ஆகையால், பிடிகாசு மற்றும் மீளளிக்கப்பட வேண்டிய கேள்விப் பண வைப்புக்கள் என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப் புக்களின் கீழ் பதியப்பட்டுள்ளன.	அவ்வாறான பொறுப்புக் களிற்கு நிலவுகின்ற கடப்பாடுகளை முறை யாக இனங்கண்ட பின் னர், நீண்டகாலமாக நிலுவையிலுள்ள செலு த்த வேண்டிய மீதிக ளைத் தீர்ப்பதற்கு அல்லது வருமான த்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடி க்கைகள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	முன்னைய ஆண்டுகளிலிருந்து நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தொடர்ச்சியாக கணக்குகளிற்கு முன்னெடுத்து வரப்பட்டிருந்த ரூபா 500,000, ரூபா 156,400 மற்றும் ரூபா 46,168 தொகையான முறையே நிகழத்தக்க பொறுப்புக்கள், சேவைக் கட்டணத்திற்கான ஏற்பாடு மற்றும் செலுத்தவேண்டிய ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகிய மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை.	குறித்த நடைமுறைப் பொறுப்பு மீதிகளை அகற்றுவதற்கு தேவை யான நடவடிக்கை எடுக்கப்படும்.	அவ்வாறான பொறுப்புக் களிற்கு நிலவுகின்ற கடப்பாடுகளை முறை யாக இனங்கண்ட பின் னர், நீண்டகாலமாக நிலுவையிலுள்ள செலு த்த வேண்டிய மீதிக ளைத் தீர்ப்பதற்கு அல்லது வருமான த்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடி க்கைகள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ) 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிரு த்திச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு	ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை யேனும் தேசிய ஆலோ சனை பேரவைக் கூட்டத் தை நடாத்துவதற்குப் பதி லாக மீளாய்வாண்டில் இரண்டு கூட்டங்கள் மாத்தி ரமே நடாத்தப்பட்டிருந்தன.	2019 பெப்ரவரி மற்றும் ஜூன் மாதங்களில் இரண்டு ஆலோசனை க் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2019 செப்டம்பர் அன்று ஜனாதிபதித் தேர்தல் அழைக்கப்பட்டதால், அடுத்த ஆலோசனை க் குழு கூட்டத்தை நடத்த முடியவில்லை.	சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு முகாமைத்துவம் உரிய காலத்தில் மாற்றுவழி நடவ டிக்கைகளை எடு த்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்				
- 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்டவாறு நிதிப் பிரமாணம் 371	(i)	ஒவ்வொரு விடயத்திலும் ஆகக் கூடியது ரூபா 100,000 வரை செயல் நிமித்த உப கட்டுநி தியை கணக்கீட்டு உத் தியோகத்தர் அங்கீகரி க்கலாம். எனினும் ரூபா 1,115,000 கூட்டுமொத்த மான செயல்நிமித்த முற் பணங்கள் பொதுத் திறைசேரியிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்று க்கொள்ளாமல் 11 சந்த ர்ப்பங்களில் ஒரு பதவி நிலைத் தர உத்தியோக த்தரிற்கு வழங்கப்பட்டி ருந்தது.	(i) மாதாந்த சபைக் கூட்டம் தொடர்பான செலவுகளைச் செய்வ தற்காக மொத்தம் ரூபா 105,000 வீதம் அந்தந்த அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது இது தொடர் பாக வழங்கப்பட்ட முன்பணங்கள் தீர்க்கப்பட்டுள்ளன.	சுற்றறிக்கை ஏற் பாடுகளிலிருந்து விலகிச் செயற்ப டுவதற்கு பொதுத் திறைசேரியிடமிரு ந்து முன் அங்கீ காரம் பெறப்ப டுதல் வேண்டும்.
	(ii)	செயல்நிமித்தக் கட்டு நிதிகள் அவை வழங்க ப்பட்ட நோக்கம் பூர்த்தி யடைந்ததும் உடனடி யாக தீர்ப்பனவு செய்யப் பட வேண்டும். எனினும் மேற்படி கட்டுநிதிகள் 07 நாட்கள் தொடக்கம் 34 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதத் தின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. அக் கட்டுநிதிகளில் ரூபா 320,045 தொகை அல்லது ஏறத்தாழ 28 சதவீதம் உரிய நோக்க ங்களிற்கு பயன்படுத்தப் படாமல் காசு மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டி ருந்தன. ஆகையால் முற்பணங்களை வழங்கு வதற்கு முன்னர் முறை யான மதிப்பீடு மேற்கொ ள்ளப்படாததன் காரண மாக அதன் உத்தியோ கத்தர்களால் அரச நிதி முறையற்றவாறு பயன் படுத்துவதற்கான வாய்ப் பை அதிகாரசபை வழங் கியிருந்தமை கணக்காய்வின் போது அவதானி க்கப்பட்டது.	(ii) நடைமுறை ஏற்க னவே தாபிக்கப்பட்டு ள்ளது.	பொது நிதியை அதன் ஊழியர்க ளால் தவறாகப் பயன்படுத்துவதற் கான வழியைத் தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடு க்க வேண்டும். மேலும் பொது நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்வத ற்காக முறையான மதிப்பீட்டைச் செய்தபின் முற்ப ணங்கள் வழங் கப்பட வேண்டும்.

	(iii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 7,830,458 தொகையான பயிற்சி முற்பணங்கள் 2019 டிசம்பர் 31 வரை கூட தீர்க்கப்படவில்லை.	(iii) தீர்க்கப்படாத பயிற்சி முற்பணங்களை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும், மேலும் 2015 ஜூலை மாதத்தின் 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை இனால் திருத்தப்பட்ட நிதி பிரமாணம் 371 ஐ கண்டிப்பாக பின் பற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்ப வழங்கப்பட்டது.	பொது நிதியை அதன் ஊழியர்களால் தவறாகப் பயன்படுத்துவதற்கான வழியைத் தவிர்ப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பொது நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக முறையான மதிப்பீட்டைச் செய்தபின் முற்பணங்கள் வழங்கப்பட வேண்டும்.
- நிதிப் பிரமாணம் 756, 757, 758 மற்றும் 759	(i) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 148,359,110 பெறுமதியான இருப்புக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டமையை அவதானிக்க முடிந்திருக்கவில்லை.	2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை தற்போது இடம்பெற்று வருகின்றது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 148,359,110 பெறுமதியான இருப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுத்தல் கடிதமொன்று இத்துடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது.	ஒவ்வொரு அறிக்கைக் காலத்தின் இறுதியிலுமுள்ள பௌதீக இருப்பின் கிடைப்பனவை உறுதிப்படுத் துவதற்காக அந்தந்த அறிக்கைக் காலத்தின் இறுதியில் பௌதீக இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.
	(ii) வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை தற்போது இடம்பெற்று வருகின்றது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 148,359,110 பெறுமதியான இருப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுத்தல் கடிதமொன்று இத்துடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது.	ஒவ்வொரு அறிக்கைக் காலத்தின் இறுதியிலும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நடைமுறையலாச் சொத்துக்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக அந்தந்த அறிக்கைக் காலத்தின் இறுதியில் வருடாந்த மெய்மையாய்வுச் சபை நடாத்தப்படுதல் வேண்டும்.

(இ)	2004 யூலை 29 ஆந் திகதிய பிஈடி 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை	சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது ரூபா 151,857,303 தொகை அழைப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீட்டு மூலங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	அதிகாரசபை ஊழியர்களின் பணிக்கொடை ஏற்பாட்டிற்காக இது வைத்திருக்கப்பட்டுள்ளது.	முதலீட்டை மேற்கொள்வதற்கு முன்னர் நிதி அமைச்சரின் ஒத்திசைவுடன் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 4,652,776 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,010,102 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 25,662,878 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மேலதிக நேர மற்றும் விடுமுறைகால படிகள், எழுதுகருவிச் செலவினம் மற்றும் குத்தகை வட்டிக் கொடுப்பனவு என்பன முறையே ரூபா 2,125,847 ரூபா 5,231,862 மற்றும் ரூபா 3,660,635 அதிகரித்திருந்தமை மற்றும் தங்குமிடக் கட்டணம், இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் மற்றும் கேட்போர் கூடத்தையும் கருத்தரங்கு அறைகளையும் வாடகைக்கு விடுதல் போன்ற வருமான விடயங்கள் முறையே ரூபா 1,498,045 ரூபா 3,209,016 மற்றும் ரூபா 3,577,394 ஆல் குறைவடைந்திருந்தமை இந்த பின்னடைவிற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கும் அதிகாரசபைக்கும் இடையில் 2018 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஜி.சி.சி நாடுகளில் இலங்கைத் தொழிலாளர்களின் பாதிப்பைக் குறைப்பதற்காக அவர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காக ரூபா 10,169,300 இற்கு மேற்படாத மானியத்தை வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,590,900 மற்றும் ரூபா 7,098,422 தொகைகள் முறையே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்டிருந்தன. இருப்பினும், ரூபா 3,151,369 தொகை மாத்திரமே செலவினப்பட்டதுடன், மீதமுள்ள ரூபா 6,537,953 தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் அதிகாரசபையின் வருமானமாக கருதப்பட்டிருந்தது. மேலும், இந்த மானியத்தின் கீழ் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட விவரங்கள் இந்த அறிக்கையின் திகதி வரை கூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	திறன்களின் அங்கீகரிப்பதை மேம்படுத்துவதற்கும் இலங்கைத் தொழிலாளர்களின் பாதிப்பைக் குறைப்பதற்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பால் இந்த மானியம் வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் முறையே 2018, 2019 ஆம் ஆண்டில் அடையப்பட்டுள்ளன. அந்தந்த திட்டத்தின் பாதீட்டு ஏற்பாட்டின் படி மானியத் தொகை குறித்த நோக்கத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது	சர்வதேச அமைப்புகளுடன் எந்தவொரு மானிய அல்லது கடன் உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடுவதற்கு முன்னர் வரிசை அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (இது தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு வெளியிட்ட 2014 யூன் 26 ஆந் திகதியிட்ட MOFP/ERD/2014/1 ஆம் இலக்க சுற்றறிக்கையை பார்க்கவும்.) மேலும், இந்த மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் சரியான தன்மையினை பரிசோதிப்பதற்கு நடத்தப்பட்ட செயற்திட்டங்களின் விவரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ)	அதிகாரசபையில் இந்த நோக்கத் திற்காக போதுமான நிதி ஏற்பாடுகள் கிடைப்பதைக் கருத்தில் கொள்ளாமல் அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் முன்னைய ஆண்டில் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு பணிக் கொடையினை செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 9,276,587 பெற்றுக் கொள்ளப்பட்டிரு ந்தது. இதன் விளைவாக, பொது திறைசேரியடமிருந்து பெறப்பட்ட முழுத் தொகையும் வருமானமாகக் கருதப்பட்டு, இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அதிகாரசபையின் வங்கி நடப்புக் கணக்கில் எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப் படாமல் வைக்கப்பட்டிருந்தது.	வி.ஆர்.எஸ் ஊழியர்களுக் கான பணிக்கொடையை செலுத்தும் நோக்கங்களு க்காக இந்த மானியம் முழுமையாக பயன்படுத்த ப்பட்டது	குறுகிய கால முதலீட்டு மூலங்களில் முதலீடு செய்துள்ள ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீட் டில் போதுமான நிதி இருப்பதால், அதிகார சபையின் எந்தவொரு ஊழியிரினதும் பணிக் கொடையை செலுத்து வதற்கு முகாமைத்துவம் பொதுத் திறைசேரியிட மிருந்து நிதியைப் பெறக்கூடாது.
(இ)	வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டின் மூலம் தேவையான நிதி வழங்கப்படும் என்பதற்கு உட்பட்டு நிதிக் குத்தகை அடிப்படையில் 03 புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் அதிகார சபையின் நிதியத்திலிருந்து ரூபா 8,729,172 (மூலதனப் பகுதியாக ரூபா 5,068,537 தொகையும் வட்டிப் பகுதியாக ரூபா 3,660,635 தொகை யும்) தொகை இலங்கை வங்கிக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந் தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.		
	(i) பொது திறைசேரியிடமிருந்து 2020 ஜூன் 30 வரையிலும் அவர்கள் ஒப்புக்கொண்ட படி எந்த நிதியும் பெறப்பட்டிருக்கவில்லை.	(i) திறைசேரியிடமிருந்து ஒப் புதல் பெறும் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கடிதத் தின்படி, திறைசேரி ஒவ் வொரு மாதமும் இலங்கை வங்கிக்கு குத்தகையை செலுத்தும். குத்தகை செலுத்துவதற்கான நிதி ஏற்பாடு அமைச்சின் மூலம் பல முறை கோரப்பட்டுள் ளது.	மாற்று வாகனங்களை கைதவிர்த்ததன் மூலம் பெறப்பட்ட வருமானத் தை திறைசேரிக்கு அனுப்பிய பின்னர் குத்தகை தவணைகளின் மூலதனம் மற்றும் வட்டி பகுதியை செலுத்துவத ற்கு தேவையான நிதி திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டும்.
	(ii) மேலே உள்ள 03 புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக தற்போதுள்ள 03 வாகனங்களை கைதவிர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இருப்பி னும், 2015 ஜூலை 10 திகதியிட்ட 02/15 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுக ளிற்கு முரணாக அதில் 02 வாகனங்கள் மாத்திரம் ரூபா	(ii) 03 வாகனங்களின் விற்ப னையிலிருந்து பெறப்பட்ட வருமானம், மீதமுள்ள வாகனம் விற்கப்பட்டவுடன் திறைசேரிக்கு மாற்றப்படும்.	

5,773,000 இற்கு கைதவிர்க்கப்பட் டிருந்ததுடன் 2018 ஜூலை 16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் படி இந்த தொகையை பொது திறைசேரிக்கு அனுப்பி வைக்காது அதிகாரசபை தன் வசம் வைத்துள்ளது.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) அதிகாரசபையின் ஆளுகையின் கீழுள்ள வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டிட நிலையத்தில் (சி.எச்.பி.பி) காணப்படுகின்ற பயன்படுத்தப்படாதுள்ள கட்டிடங் களின் பெரும்பகுதி, கடந்த பல வருடங்களாக பல்வேறு தரப்பின ருக்கு வாடகைக்கு விடப்பட்டுள் ளது. இருப்பினும், 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 361,245 வாடகை வருமானம் இரண்டு தரப்பினரிடமிருந்தும் 2020 ஜூன் 30 வரையிலும் வசூலிக்கப்படா மல் நிலுவையில் இருந்தது. மேலும், 2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை 04 கட்சிகளுக்கு இடையில் கையெ ழுத்திடப்பட்ட வாடகை உடன்படி க்கைகளை புதுப்பிக்க அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	நிலுவையிலுள்ள மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்கும், ஏற்க னவே காலாவதியான வாடகை உடன்படிக்கை களை புதுப்பிப்பதற்கும் அதிகாரசபை உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அதிகாரசபையின் வினைத்திறனான மற்றும் சுமுகமான செயல்பாடுகளுக் காக 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் குறிப்பி டப்பட்டுள்ள பின்வரும் செயற்பா டுகளை அதிகாரசபை நிறைவேற் றியிருக்கவில்லை.		

• ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவு செய்தலும் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் திறன்களின் கீழ் அவர்களை தரப்படுத்துதலும்.	இந்த நடவடிக்கைக்கான வர்த்தமானி அறிவித்தல் 2020.06.25 அன்று வெளியிடப் பட்டுள்ளதுடன் செய்தித்தாள் விளம்பரம், பதிவு செய்வத ற்கான விண்ணப்பங்கள் மற்றும் பதிவுசெய்தல் குழு என்பன முடிவு செய்யப்பட் டுள்ளது. அடுத்த 02 வாரங்க ளுக்குள் பதிவு செயல்முறை ஆரம்பிக்கப்படும்.	நாட்டின் நிர்மாணத் தொழிற் துறையின் சீரான செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டிற்காக சட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உடனடியாக பயனுள்ள மற்றும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப் படுதல் வேண்டும்.
• இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்படக்கூடிய நிர்மாணத் தொழிற் துறையில் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானக் பகுதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குசர்களின் தரவுத் தளத்தை பராமரித்தல்.	திறன் தொழிலாளர்களை பதிவு செய்யும் ஒழுங்கு முறை இப்போது இறுதி கட்டத்தில் உள்ளதுடன் அது விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும்.	
• இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்படக்கூடிய நிர்மாண வர்த்தகங்களில் ஈடுபட்டு ள்ள தொழிற் திறன் கொண்ட தொழிலாளர்களுக்கு பதிவுசெய்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை் வழங்குதல்.	வர்த்தமானி இன்னும் வெளி யிடப்படவில்லை. வர்த்தமா னியை வெளியிட்ட பின்னர், செயல்முறை ஆரம்பிக்கப்ப டும்.	
• கட்டுமான தொழில் அபிவிருத்தி நிதியத்தை நிறுவுதல்.	அமைச்சரின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிப்பதற்காக சிஐடிஏ நிதியத்துடன் தொடர்புடைய பிரமாணம் தயாரிக்கப்பட்டு ள்ளது. ஒட்டுமொத்த சிஐடி நிதியமும் திரண்ட நிதியத் துடன் இணைக்கப்பட வேண் டும் என்பதை பிரதிபலிக்கும் வகையில் சட்டத்தில் திருத் தம் செய்யப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த சட்டம் இப்போது திருத்தப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலு டன் சட்ட வரைஞருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை செயற்படுத் துவதற்கு முன்னர் புதிய அரசாங்கத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டுமென்று சட்ட வரைஞர் சுட்டிக்காட்டியி ருந்தார்.	

(இ) நிர்மாண கைத்தொழிற் துறையை மேம்படுத்துவதற்காக அதிகாரசபை வெளியிட்டுள்ள அனைத்து வெளியீடுக ளும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப 09 முதல் 32 ஆண்டுகள் வரையான காலத்திற்கும் மேலாக திருத்தப்பட்டோ அல்லது புதுப்பிக்க ப்பட்டோ இருக்கவில்லை. எனவே, (அ) நிர்மாணத் தொழிற் துறையில் நியமங்களை வகுத்தல் (ஆ) நிர்மாணத் தொழிலுடன் தொடர்புடைய ஒழுக்க நெறிகள், வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் செயல்முறை மற்றும் நிர்மாணத் தொழில் தொடர்பான ஆவணங்கள் ஆகிய வற்றை நடைமுறைப்படுத்துதல் மற்றும் (இ) நிர்மாணத் துறையின் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாடு போன்றவற்றைத் தூண்டுவதற்காக நிர்மாணத் துறை யின் பங்குதாரர்களிற்கு தந்துரோபாய தலைமையை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடைதல் என்பது கணக்காய்வில் கேள்விக்குரியாக காணப்பட்டது.	நிர்மாணத் தொழிற் துறை யின் வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ப அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஏதேனும் திருத்த ங்கள் தேவையாக உள்ளதா என்பதை பார்வையிடுவதற்கு ஒவ்வொரு 5 ஆண்டு கால இடைவெளியில் அதிகார சபையின் வெளியீடுகள் மீள் பரிசீலனை செய்யப்படுகின் றன. திருத்தங்கள் தேவையா என்பதை வழிநடத்தல் குழு தீர்மானிக்கின்றது. இந்த செயல்முறையின் அடிப்படை யில், திருத்தங்கள் தேவைப்ப டுகின்ற வெளியீடுகள் திருத்தப்படுகின்றன.	நிர்மாணக் கைத்தொழில் துறையினை தரமுயர்த்தி அதிகாரசபையின் சட்டத்திலுள்ள குறிக்கோ ள்களை அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அதிகாரசபை யால் வெளியிடப்பட் டுள்ள காலம் கடந்த சகல வெளியீடுகளையும் திருத்துவதற்கு அல்லது நாளதுவரையாக்குவதற்கு பயனுள்ளதும் காத்திர மானதுமான நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண் டும்.
(ஈ)‘‘ஷில்பா சவிய” பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் பயிற்சியாளர்க ளிடையே விநியோகிப்பதற்காக 2016 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் ரூபா 155,684,319 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், சீருடைகள் மற்றும் கருவித்தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், இது தொடர்பாக 2019 டிசம்பர் 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையில், அந்தப் பொருட்களில், ரூபா 10,924,385 பெறுமதியானவை பயிற்சி பெறுனர்களிற்கு பகிர்ந்தளிக்கப்படாது அதிகாரசபைக்கு சொந்தமான நிர்மாண உபகரணங்கள் பயிற்சி நிலையத்தின் (செட்ராக்) இரண்டு அறைகளில் 2020 ஜூன் 30 வரை வைக்கப்பட்டிருந்தன.	திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்து செயல்படு த்தப்பட்டு வருகின்றது. எனவே, 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் போது மீதமு ள்ள புத்தகங்கள் சஞ்சிகை கள், சீருடைகள் மற்றும் கருவித்தொகுதிகள் பயன்ப டுத்தப்படும்.	கொள்வனவு செய்யப் பட்ட பொருட்களை பயனற்றுக் களஞ்சித்தில் வைத்திருக்காது உரிய நோக்கத்திற்காக பயன் படுத்த உடனடி நடவடி க்கை எடுக்கப்பட வேண் டும்.

3.3 பயன்படுத்தப்படாத நிதிகள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் பல்வேறு நோக்கங்களுக்காக பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்களில் ரூபா 252,539,098 தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப் படாமல் அதிகாரசபையின் வங்கி நடப்புக் கணக்குகளில் வைக்கப் பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் சுமார் ரூபா 25 மில்லியன் தொகையான நட்டம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, 2020 டிசம்பர் 01 தேதியிட்ட வரிசை அமைச்சின் கடிதத்தின் மூலம் 2020 ஜனவரி 01 ஆம் திகதி ரூபா 14,612,249 மூலதன கட்டுநிதி வரிசை அமைச்சிடமிருந்து கிடைத் திருந்தது. இருப்பினும், இது 2020 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்ட கட்டுநிதியாகக் கருதப்பட்டிருந்த துடன் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஒரு வங்கிக் கணக்கில் செயலற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளது.	மீதமுள்ள நிலுவைகள் 2020 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் / உடன்படிக்கைக ளிலுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப பயன்படுத்தப்படும்.	வங்கி நடப்புக் கணக்கு களில் விளைவற்றுக் காணப்படுகின்ற பொது நிதியை உரிய நோக்க த்திற்காகப் பயன்படுத்து வதற்கு அதிகாரசபை யால் ஒரு பயனுள்ள தந்துரோபாயத் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.
(ஆ) அதிகாரசபையின் 03 நடை முறைக் கணக்குகளுடன தொடர் புடைய வங்கிக் கூற்றுக்கள் மற்றும் காசுப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 300 மில்லியன் தொகையான சராசரிக் காசு மீதி அவ் வங்கி நடைமுறைக் கணக்குகளில் எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்ப டாமல் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு முழுவதும் விளைவற்றிருந்தன. மேலும் 2020 யூன் 30 இல் உள்ளவாறு அந் நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் ரூபா 394.28 மில்லியன் வரை அதிகரித்துக் காணப்பட்டது.	ரூபா 361.33 மில்லியன் வங்கி மீதியில் ரூபா 252.53 மில்லியன் தொகை செயற் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக திறைசேரி யிடமிருந்து கிடைத்த கட்டுநிதியாகும். முறையான மேற்பார்வை மற்றும் கட்டுப் பாட்டின் கீழ் நிதிகளை முகாமை செய்வதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும். குறித்த செயற்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கட்டுநிதி பயன்படுத்தப்படும்.	வங்கி நடைமுறைக் கணக்குகளில் விளைவற் றதாக பொது நிதிகளை வைத்திருக்காது உரிய நோக்கத்திற்காக அவற் றை குறித்த நேரத்தில் பயன்படுத்துவதற்கு அதிகாரசபையினால் பய னுள்ள உபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமு றைப்படுத்தப்படுதல் வேண்டும்.
(இ) ரூபா 98,500 ஆனதோர் மீதி எந்தவொரு நோக்கத்திற்கும் பயன் படுத்தப்படாது 2015 முதல் செயற் பாடற்ற வங்கிக் கணக்கொன்றில் வைக்கப்பட்டுள்ளது.	நிர்மாணத் தொழில் அபிவி ருத்தி நிதியத்தை பேணும் நோக்கத்திற்காக இந்த கண க்கு திறக்கப்பட்டது. நிதியம் தாபிக்கப்பட்ட பின்னர், இந் தக் கணக்கு செயற்படுத்தப்ப டும்.	அதிகாரசபையால் நீண்ட காலத்திற்கு செயற்பா டற்ற வங்கிக் கணக்கு பேணப்படக்கூடாது.

3.4 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரைகள்	பரிந்துரைகள்
பதிவுசெய்யப்பட்ட திறன் கொண்ட நிர்மாண கைவினைஞர்களுக்கு கைவி னைஞர் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ஐ.சி.டி.ஏ) உடன் 2019 ஜூலை 24, அன்று புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றில் அதிகாரசபை கையெழுத்திட் டதுடன் செயற்திட்டக் கூறின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 56.74 மில்லியன் ஆகும். அதில் ரூபா 11.35 மில்லியன் தொகை 2019 ஆகஸ்ட் 13 அன்று ஐ.சி.டி.ஏ-க்கு வேலை ஆரம்பித்தல் முற்பணமாக செலுத்தப் பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.		
(i) புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு 1.2 இன் படி, இந்த செயற்திட்டத்தை 2019 - 2020 காலப்ப குதியில் பூரணப்படுத்து வதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டி ருந்தது. ஆயினும்கூட, இந்த அறிக்கையின் திகதி வரையிலும் எவ்வித செயன் முன்னேற்றமும் காண்பிக்கப்படாததுடன் ஐ.சி.டி.ஏ. இற்கு செலுத்திய வேலை ஆரம்பித்தல் முற்பணம் பயனற்ற தாகியிருந்தது.	(i) நிலவும் கோவிட் 19 இன் சூழ்நிலை காரணமாக, புரிந்து ணர்வு உடன்படிக்கையின் படி நடவடிக்கைகளை மேற்கொள் வது தாமதமானது. எனவே, திருத்தப்பட்ட அட்டவணைப்படி அந்த நடவடிக்கைகள் மீள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் பட்டுள்ளன.	செலவிடப்பட்ட பணத்தி ற்கான அதிகூடிய பெறும தியை உறுதி செய்வதற் காக திட்டமிடப்பட்ட செயற்திட்ட காலத்திற் குள் அனைத்து கொள்வ னவு நடவடிக்கைகளை யும் முடிப்பதந்கு காத்திர மான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண் டும்.
(ii) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டுதலின் 5.4.4 வழிகாட்டலின் படி ஐ.சி.டி.ஏ. இற்கு மேற்படி முற்பணம் செலுத்துவதற்கு முன்னர் ஏற்றுக் கொள்ளத்தக்க உத்தரவாதம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.	(ii) புரிந்துணர்வு உடன்படிக் கையின் படி வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டுதல்களின் படி வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்துவத ற்கு முனனர் ஏற்றுக் கொள்ளக்கூடிய உத்த ரவாதம் பெறப்பட வேண் டும்.
(iii) இந்த ஒப்பந்தப் பணிகளை ஐ.சி.டி.ஏ. இற்கு வழங்குவது	(iii) இந்த ஒப்பந்தத்தை ஐ.சி.டி.ஏ. இற்கு வழங்குவத	அங்கீகாரம் கணக்காய் விற்கு கிடைக்கப் பெறு

	தொடர்பான எந்தவொரு அங்கீகார மும் கணக்காய்விற்கு கிடைக்கப் பெறவில்லை.	ற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.	தல் வேண்டும்.
(iv)	இந்த நோக்கத்திற்காக பொதுத் திறைசேரியினால் ரூபா 20 மில் லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சியுள்ள ரூபா 8.65 மில்லியன் தொகை 2020 ஜூலை 15 வரை கூட குறித்த நோக்கம் நோக்கத் திற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.	(iv) இரு நிறுவனங்களுக் கிடையே கையெழுத்திடப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக் கையின் படி ஐ.சி.டி.ஏ. இற்கு பணம் செலுத்தப்படும். பணி கள் நிறைவடைந்த பின்னர் மீதமுள்ள பணம் வழங்கப் படும்.	ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ஆம் திகதியின் முடிவிலும் உள்ள எந்தவொரு மீதி தொகையும் பொது திறைசேரிக்கு வரிசை அமைச்சின் ஊடாக அனுப்பிவைக்கப்படு தல் வேண்டும்.

3.5 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல் களின் படி, 2003 ஜூன் 02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகார சபையின் ஒரு ஊழியர் 2015 பெப்ரவரி 09 முதல் அப்போதைய வரிசை அமைச்சிற்கு (வீடமைப்பு மற்றும் சமூர்தி அமைச்சு) விடுவிக்கப்பட்டிருந் தார்/இணைக்கப்பட்டிருந்தார். 2015 முதல் பெப்ரவரி 09 முதல் 2019 டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதியில் இந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகாக சுமார் ரூபா 4,117,355 செலுத்தப் பட்டிருந்த போதிலும், 2020 ஜூன் 30 வரை வரிசை அமைச்சிலிருந்து எந்த நிதியும் திருப்பிச் செலுத்தப்பட்டிருக் கவில்லை.	ஊழியர் வரிசை அமைச்சின் ஊடக பிரிவுக்கு விடுவிக்க ப்பட்டுள்ளார். இருப்பினும், ‘‘ஷில்பசவிய’’ மற்றும் அதிகா ரசபையின் பிற செயற்திட்டங் களை மேற்கொள்வதன் மூலம் அவர் தனது சேவையை அதிகாரசபைக்கு வழங்கியுள்ளார். அவரை விடுவிக்குமாறு அமைச்சிடம் ஏற்கனவே கோரப்பட்டுள்ளது.	2003 ஜூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க நல்லாட்சிக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் எந்த ஊழியரும் வரிசை அமைச் சிற்கு விடுவிக்கப்பட/ இணைக்கப்படக் கூடாது.

3.6 வாகன தொகுதி முகாமைத்துவம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது 07 வாகனங்கள் 10 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளா கியிருந்ததுடன் அவ் வாகனங்களை திருத்துவதற்காக ரூபா 241,597 தொகை செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 03 வாகனங்கள் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் திருத்தப்பட்டிருக்காததுடன் பல்வேறு காரணங்களால் பயன்படுத்தாது	திருத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள எல்லா வாகனங்களும் 20 ஆண்டு களிற்கு மேல் பழமை வாய்ந்தனவாகும். சந்தை யில் உதிரிப்பாகங்கள் இல்லாமையால் அவற்றை திருத்துவது கடினமாக உள்ளது. வாகன விபத்து க்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் ஏற்கனவே	காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்புக் களை தீர்மானிப்பதற்கும் விசாரணைகளை நடாத்து வற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

வைக்கப்பட்டுள்ளன. எனினும் காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளை பெற்றுக்கொள்வ தற்கு முன்னர் நட்டத்தின் அளவு மற்றும் காரணங்களை மதிப்பீடு செய்வத ற்கும் பொறுப்புக்களை தீர்மானிப்ப தற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் இந்த வாகன விபத்துக்களுக்கான ஆரம்ப அறிக்கையும் இறுதி அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் அதிகாரசபை நாளதுவரையாக்கப்பட்ட விபத்துப் பதிவேட்டை பேணியிருந்தது.	

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 கூட்டிணைந்த திட்டம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக் கப்பட்ட நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வேண்டப்ப ட்டவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 2020 இற்கான நாளது வரையாக்கப் பட்ட கூட்டிணைந்த திட்டம் 2020.07.23 ஆந் திகதி முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. முகாமைத் துவச் சபையின் அங்கீகாரத் தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் 2020 இற்கான நாளது வரையாக்கப்பட்ட கூட்டி ணைந்த திட்டமும் திருத்திய பாதீடும் உரிய திணைக்கள ங்களிற்கு சமர்ப்பிக்கப்படும்.	ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்குவதற்கு குறைந் தது 15 நாட்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபை அங்கீகரித்த நாளது வரையாக்கப்பட்ட கூட்டி ணைந்த திட்டம் மற்றும் நாளதுவரையாக்கிய பாதீடு ஆகியவற்றின் சான் றுறுதிப்படுத்திய பிரதிகள் வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

4.2 வருடாந்த அறிக்கையை முன்வைத்தல்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டுக்கான அதிகார சபையின் வருடாந்த அறிக்கை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட் டிருக்கவில்லை.	உரிய வருடாந்த அறிக்கை களை வரிசை அமைச்சிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது பாராளுமன்றத்தில் விரை வில் முன்வைக்கப்படும்.	மேலும் தாமதமின்றி அவ் அறிக்கைகளை பாராளு மன்றத்தில் முன்வைப்பதற் கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும்.